ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப்பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2325/42 - 2023 මාර්තු මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.03.30

*2325/42 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண சபை**

துணைச் சட்டம்

**1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கத்தக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழ் பிறப்பிக்கப்படும் உத்தரவு**

மத்திய மாகாணத்தின் ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ. கமகே ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கத்தக்க, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள உத்தரவினை இங்கு பிரசுரிப்பதாக அறிவிக்கின்றேன்.

சட்டத்தரணி **லலித் யூ. கமகே,**
ஆளுநர்,
மத்திய மாகாணம்.

மாளிகை சதுக்கம்,
கண்டி,
2023, மாச்சு 16.

1A - PG 6272 — 106 (2023/03)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

உத்தரவு

1. 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 262 ஆவது ஏற்பாடுகளுக்கமைய, இவ்வுத்தரவானது, பிரதேச சபையொன்றின் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்ட பெண்களின் பங்களிப்புடன், பிரதேச சபையின் அதிகார வரம்பில் வாழும் பெண்களினது நல்வாழ்வுக்கும் நலன்புரிக்குமாக பிரதேச சபையின் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றும் போது பின்பற்ற வேண்டிய விடயங்கள் குறித்து பிரதேச சபைகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அவசியமானவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆலோசனைகளை வழங்கல் மற்றும் அதற்கான ஏற்பாடுகளை வழங்குவதற்கென இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

2. பிரதேச சபைகளினால் ஒவ்வொரு நிதியாண்டுக்குமாக பிரதேச சபையின் அதிகார பிரதேசத்தில் வாழும் பெண்களின் முன்னேற்றத்துக்காகவும் அவர்களின் நல்வாழ்வுக்கும் நலன்புரிக்குமாகவும் அத்தகைய பிரதேச சபைகளினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டான மூலோபாயங்கள் பற்றிய இக்கட்டளையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் மீது பிரதேச சபைக்கு அறிவுறுத்தல்களை வழங்கும் பொருட்டு, மகளிர் விவகாரங்கள் தொடர்பான விசேட ஆலோசனைக் குழுவொன்றை நியமிப்பதற்கெனத் செயற்படுதல் வேண்டும்.

3. இந்த உத்தரவின் கீழ் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவொன்று பின்வரும் விடயங்கள் தொடர்பில் பிரதேச சபைக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் வேண்டும்:

(1) பெண்கள் அதிகார பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் சமூக நலன்புரி நடவடிக்கைகளினல் ஈடுபடுத்தக்கூடிய வகையில் பெண்களின் முன்னேற்றத்துக்கான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்.

(2) பெண்களுக்கான அறிவையும், மனப்பாங்குகளையும் மற்றும் திறன்களையும் முன்னேற்றுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

(3) பிரதேச சபையின் அதிகார பிரதேசத்திலுள்ள பெண்களைப் பாதுகாக்கும் பொருட்டும், துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் பொருட்டும், பிரதேச சபை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களும் மூலோபாயங்களும் நடைமுறைப்படுத்தல்

(4) பெண்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களையும் கடன் திட்டங்களையும் அறிமுகப்படுத்தல்

(5) அதிகார பிரதேசத்தில் பசுமை விவசாயம் உள்ளடங்கலாக வீட்டுத் தோட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவிப்பதற்கு அவசியமான அறிவுறுத்தல்களையும் உதவியையும் வழங்குதல்

(6) அதிகார இடப்பரப்பில் வாழும் பெண்களின் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் நோக்கத்துக்காக, கலந்துரையாடல் குழாமொன்றை உருவாக்குவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்.

(7) பெண்களின் தனித் திறன்களையும் விருத்திச் செய்யவும் பாரம்பரிய கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் அவசியமான உதவிகளை வழங்குதல் மற்றும் அக்கைத்தொழில்களுக்குப் பொருத்தமான சந்தையை அறிமுகப்படுத்தல்.

4. இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவின் அமைப்புமுறையானது, அந்த பிரதேச சபையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பெண் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்கினருக்குச் சமமான எண்ணிக்கையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், பிரதேச சபையின் பெண் உறுப்பினர்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். ஆயின், பிரதேச சபையின் தலைவர் பெண்ணொருவராக இருக்கின்றவிடத்து, அவர் குழுவின் பதவிவழி உறுப்பினரொருவராக இருத்தல் வேண்டும்.

5. இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களிடையே ,ருந்து தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர், பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பின் மூலம், அக்குழுவின் தலைவராக நியமிக்கப்படுதல் வேண்டும். ஆயின், பிரதேச சபையின் தலைவர் பெண்ணொருவராக இருக்கின்றவிடத்து, அப்பெண் தலைவர் குழுவின் பெண் தலைவராக நியமிக்கப்பட வேண்டும்.

6. இக்கட்டளைச் சட்டத்தின் மூலம் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவானது, குழுவென்ற வகையில் உடன்பட்ட எல்லாக் உத்தரவுகளும், கூட்டத்துக்குச் சமுகமளித்து வாக்களித்த பெரும்பான்மை உறுப்பினர்களினால் உடன்பாடு காணப்பட்ட உத்தரவுகளாக இருத்தல் வேண்டும்.

7. இவ்வுத்தரவின் கீழான ஏதேனும் கூட்டத்தில் எவையேனும் விடயங்களுக்குச் சார்பாக அல்லது சார்பின்றி அளிக்கப்பட்ட வாக்குகள் சமமாகக் காணப்படும் பட்சத்தில், அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்கும் உறுப்பினர், அவரது சொந்த வாக்குக்கு மேலதிக வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

8. இக்கட்டளையின்கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான தினத்தில் அத்தகைய கூட்டத்திற்குச் சமுகமளித்துள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றிலொரு பங்கினருக்குச் சமமானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன், குழுக் கூட்டத்துக்காக குறித்துரைக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை உறுதியாக இருந்தாலே ஒழிய எத்தகைய நடவடிக்கையும் கூட்டத்தில் செயற்படுத்தக் கூடாது.

9. பிரதேச சபையின் செயலாளரர் உத்தியோகபூர்வமாக, இவ்வுத்தரவின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவின் செயலாளராக இருத்தல் வேண்டும்.

10. விசேட ஆலோசனைக் குழுவினது கூட்டமொன்றின் விடயத்தில்-

(1) இக்கூட்டமானது, ஆகக்குறைந்தது ஒவ்வொரு மாதத்திலும் ஒரு தடவையேனும் நடைபெற வேண்டுமென்பதுடன், குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு வாரத்தின் எத்தினத்திலும் கூட்டப்படலாம்.

(2) கூட்டம் எந்தத் தினத்தில் நடைபெற வேண்டுமோ அத்தினமானது பெரும்பான்மை உறுப்பினர்களினால் உடன்பாடு காணப்பட்டவாறாக விசேட ஆலோசனைக் குழுவின் தலைவரினால் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

(3) கூட்டத்தைக் கூட்டுதல் பற்றிய அறிவித்தலொன்று, குழுவின் தலைரினால் கூட்டத் திகதிக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் கூட்டத்துக்கான எல்லா உறுப்பினர்களுக்கும் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் 'சேர்ப்பித்தல்' என்பது வதிவிட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் எனப் பொருள்படும்.

(4) அத்தினத்தில் இடம்பெறும் நிகழ்ச்சிநிரலானது கூட்டம் பற்றிய அறிவித்தலுடன் சேர்த்து சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், நிகழ்ச்சிநிரலில் குறித்துரைக்கப்பட்டவாறாக அத்தகைய திகதியின் கடமைகள் புரியப்படுதலும் வேண்டும்.

(5) எவரேனும் உறுப்பினர், கூட்டத்திற்கு முன்னர் இடப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் பெரும்பான்மை அபிப்பிராயத்துக்கு உடன்பட மறுக்கின்ற கருமங்களைக் கொண்டிருப்பின், அவை எழுத்துமூலம் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறிருப்பின், அத்தகைய திகதிக்குப் பொருத்தமான அத்தின அறிக்கையின் பாகமொன்றாக அது கவனத்திற் கொள்ளப்படுதலும் வேண்டும்.

(6) சபையினால் இக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்ட ஏதேனும் விடயம், அத்துடன் குழுவின் உறுப்பினரொருவரினால் அல்லது வேறு எவரேனும் உறுப்பினரினால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய இக்கட்டளையின் நோக்கம் தொடர்பாகவுள்ள ஏதேனும் கருத்து, கேள்வி என்பன எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்படலாம் என்பதுடன், எழுத்திலான அறிக்கையானது, கூட்டத்துக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(7) குழுவுக்கு முன் இடப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பிலான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளும் எல்லா உறுப்பினர்களும், வாக்குகளை அளிப்பதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(8) கூட்டத்துக்குச் சமுகமளித்த உறுப்பினர்கள் அவர்களது கையொப்பங்களையிட்டு அங்கீகாரம் வழங்கியதும், குழுவினது அறிக்கையின் சான்றுப்படுத்தப்பட்ட எல்லாப் பிரதிகளும் பரவலாக விநியோகிக்கப்படுதல் வேண்டும்.

11. இக்கட்டளையின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவின் ஏதேனும் கூட்டம் தொடர்பிலான நடவடிக்கைகளும் செயல்நடவடிக்கைகளும் குழுவின் செயலாளரினால் அறிக்கையிடப்படுதல் வேண்டும் என்பதுடன், இயைபான அறிக்கையானது, அத்தினத்தில் கூட்டத்துக்குச் சமுகமளித்த எல்லா உறுப்பினர்களும் அவர்களது கையொப்பங்களை இடுவதன்மூலம் அங்கீகரிக்கப்படுதலும் வேண்டும். அறிக்கையானது அங்ஙனம் அங்கீகரிக்கப்பட்டதும், குழுவின் செயலாளர் அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை குழுவின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் வழங்க வேண்டும்.

12. இக்கட்டளையின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவினால் கவனத்திற் கொள்ளப்பட்ட ஆவணங்களும் குழு அறிக்கைகளும் பாதுகாப்பாக வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

13. 1) இக்கட்டளையின்கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவின் நியமன உறுப்பினரொருவர், குழுவின் அனுமதியின்றி குழுவின் மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ச்சியாகச் சமுகமளித்திராதிருப்பின், விசேட ஆலோசனைக் குழுவிலான அவரது உறுப்பினர் உரிமை முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

2) குழுவில் ஏற்படும் ஏதேனும் வெற்றிடத்துக்கு வேறோர் உறுப்பினர் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், உறுப்பினர்களை நியமிப்பதில் இக்கட்டளையின்கீழ் குறித்துரைக்கப்பட்ட அமைப்புமுறை ஏற்புடையதாதலும் வேண்டும்.

3) குழுவில் ஏற்பட்ட வெற்றிடமொன்றுக்கு உறுப்பினரொருவரை நியமிக்கும் பட்சத்தில், நியமிக்கப்பட்ட அத்தகைய உறுப்பினரின் பதவிக்காலமானது அவர் எந்த உறுப்பினரை அடுத்து வருகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாது எஞ்சியுள்ள பதவிக்காலமாக இருத்தல் வேண்டும்.

14. 1) பிரதேச சபையின் எவரேனும் உறுப்பினர் அல்லது அலுவலர், குழுவின் முன்னர் இடப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அவரது கருத்துக்களை முன்வைப்பது அப்போதைக்கு அவசியமானதென அபிப்பிராயப்படுகின்றபோதெல்லாம், அத்தகைய இயைபான கருத்துக்கள் குழுவுக்கு வாய்மொழிமூலமாக அல்லது எழுத்துமூலமாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2) குழுவானது அதன் முன்னர் இடப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொள்வது பொருத்தமானதென தீர்மானிக்கப்படின், அக்குழு அத்தகைய விடயம் தொடர்பில் பொதுக் கூட்டத்துக்கான இறுதி அறிவுறுத்தல்களைச் சமர்ப்பிக்க முன்னர் பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு செயல்படுதல் வேண்டும்.

15. இக்கட்டளையின்கீழான விசேட ஆலோசனைக் குழுவின்கீழ் கருத்திற்கொள்ளப்பட்ட பிரதேச சபையின் அங்கீகாரத்துக்காக ஒவ்வொரு மாதமும் சமர்ப்பிக்கப்பட்ட விதப்புரைகள் தொடர்பான கருத்துக்கள், பொதுக் கூட்டத்தில் அல்லது பிரதேச சபையினால் முடிவு செய்யப்பட வேண்டிய அடுத்துவரும் மாதத்திலான விசேட கூட்டமொன்றில் அத்தகைய குழுவின் தவிசாளரினால் முன்மொழியப்படுதல் வேண்டும்.

16. குழுவொன்றின் நடவடிக்கைகள் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் இருத்தல் வேண்டும் என்பதுடன், அறிக்கையானது தொடர்பாடல் மொழி மூலத்துக்கு இசைவாகத் தயாரிக்கப்படுதலும் வேண்டும். சிங்கள மொழிமூலத்தில் தயாரிக்கப்பட்ட குழு அறிக்கையின் தமிழ் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கும், தமிழ் மொழிமூலத்தில் தயாரிக்கப்பட்ட குழு அறிக்கையின் சிங்கள பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கும் உரித்துடையவராவார்.

17. இக்கட்டளையின் சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

EOG 03- 0364/1

---

**மத்திய மாகாண சபை**

துணைச் சட்டம்

**1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கத்தக்க 255 ஆம் அதிகாரமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247 ஆம் பிரிவின் கீழ் பிறப்பிக்கப்படும் உத்தரவு**

மத்திய மாகாணத்தின் ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ. கமகே ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் ,லக்க, மாகாண சபைகள் (திருத்தப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கத்தக்க, நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரமான) நகர சபை கட்டளைச் சட்டத்தின் 247 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள உத்தரவினை இங்கு பிரசுரிப்பதாக அறிவிக்கின்றேன்.

சட்டத்தரணி **லலித் யூ. கமகே,**
ஆளுநர்,
மத்திய மாகாணம்.

மாளிகை சதுக்கம்,
கண்டி,
2023, மாச்சு 16.

**கட்டளை**

1. 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 262 ஆவது ஏற்பாடுகளுக்கமைய, இவ்வுத்தரவானது, நகர சபையொன்றின் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்ட பெண்களின் பங்களிப்புடன், நகர சபையின் அதிகார வரம்பில் வாழும் பெண்களினது நல்வாழ்வுக்கும் நலன்புரிக்குமாக நகர சபையின் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றும் போது பின்பற்ற வேண்டிய விடயங்கள் குறித்து நகர சபைகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அவசியமானவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆலோசனைகளை வழங்கல் மற்றும் அதற்கான ஏற்பாடுகளை வழங்குவதற்கென இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

2. நகர சபைகளினால் ஒவ்வொரு நிதியாண்டுக்குமாக நகர சபையின் அதிகார பிரதேசத்தில் வாழும் பெண்களின் முன்னேற்றத்துக்காகவும் அவர்களின் நல்வாழ்வுக்கும் நலன்புரிக்குமாகவும் அத்தகைய நகர சபைகளினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டான மூலோபாயங்கள் பற்றிய ,க்கட்டளையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் மீது நகர சபைக்கு அறிவுறுத்தல்களை வழங்கும் பொருட்டு, மகளிர் விவகாரங்கள் தொடர்பான விசேட ஆலோசனைக் குழுவொன்றை நியமிப்பதற்கெனத் செயற்டுதல் வேண்டும்.

3. இந்த உத்தரவின் கீழ் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவொன்று பின்வரும் விடயங்கள் தொடர்பில் நகர சபைக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் வேண்டும்:

(1) பெண்கள் அதிகார பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் சமூக நலன்புரி நடவடிக்கைகளினல் ஈடுபடுத்தக்கூடிய வகையில் பெண்களின் முன்னேற்றத்துக்கான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்.

(2) பெண்களுக்கான அறிவையும், மனப்பாங்குகளையும் மற்றும் திறன்களையும் முன்னேற்றுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

(3) நகர சபையின் அதிகார பிரதேசத்திலுள்ள பெண்களைப் பாதுகாக்கும் பொருட்டும், துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் பொருட்டும், நகர சபை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களும் மூலோபாயங்களும் நடைமுறைப்படுத்தல்

(4) பெண்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களையும் கடன் திட்டங்களையும் அறிமுகப்படுத்தல்

(5) அதிகார பிரதேசத்தில் பசுமை விவசாயம் உள்ளடங்கலாக வீட்டுத் தோட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவிப்பதற்கு அவசியமான அறிவுறுத்தல்களையும் உதவியையும் வழங்குதல்

(6) அதிகார இடப்பரப்பில் வாழும் பெண்களின் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் நோக்கத்துக்காக, கலந்துரையாடல் குழாமொன்றை உருவாக்குவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்.

(7) பெண்களின் தனித் திறன்களையும் விருத்திச் செய்யவும் பாரம்பரிய கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் அவசியமான உதவிகளை வழங்குதல் மற்றும் அக்கைத்தொழில்களுக்குப் பொருத்தமான சந்தையை அறிமுகப்படுத்தல்.

4. இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவின் அமைப்புமுறையானது, அந்த நகர சபையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பெண் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்கினருக்குச் சமமான எண்ணிக்கையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், நகர சபையின் பெண் உறுப்பினர்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். ஆயின், நகர சபையின் நகரபிதா பெண்ணொருவராக இருக்கின்றவிடத்து, அவர் குழுவின் பதவிவழி உறுப்பினரொருவராக இருத்தல் வேண்டும்.

5. இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர், பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பின் மூலம், அக்குழுவின் தலைவராக நியமிக்கப்படுதல் வேண்டும். ஆயின், நகர சபையின் நகரபிதா பெண்ணொருவராக இருக்கின்றவிடத்து, அப்பெண் தலைவர் குழுவின் பெண் தலைவராக நியமிக்கப்பட வேண்டும்.

6. இக்கட்டளைச் சட்டத்தின் மூலம் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவானது, குழுவென்ற வகையில் உடன்பட்ட எல்லாக் உத்தரவுகளும், கூட்டத்துக்குச் சமுகமளித்து வாக்களித்த பெரும்பான்மை உறுப்பினர்களினால் உடன்பாடு காணப்பட்ட உத்தரவுகளாக இருத்தல் வேண்டும்.

7. இவ்வுத்தரவின் கீழான ஏதேனும் கூட்டத்தில் எவையேனும் விடயங்களுக்குச் சார்பாக அல்லது சார்பின்றி அளிக்கப்பட்ட வாக்குகள் சமமாகக் காணப்படும் பட்சத்தில், அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்கும் உறுப்பினர், அவரது சொந்த வாக்குக்கு மேலதிக வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

8. இக்கட்டளையின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான தினத்தில் அத்தகைய கூட்டத்திற்குச் சமுகமளித்துள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றிலொரு பங்கினருக்குச் சமமானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன், குழுக் கூட்டத்துக்காக குறித்துரைக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை உறுதியாக இருந்தாலே ஒழிய எத்தகைய நடவடிக்கையும் கூட்டத்தில் செயற்படுத்தக் கூடாது.

9. நகர சபையின் செயலாளரர் உத்தியோகபூர்வமாக, இவ்வுத்தரவின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவின் செயலாளராக இருத்தல் வேண்டும்.

10. விசேட ஆலோசனைக் குழுவினது கூட்டமொன்றின் விடயத்தில் -

(1) இக்கூட்டமானது, ஆகக்குறைந்தது ஒவ்வொரு மாதத்திலும் ஒரு தடவையேனும் நடைபெற வேண்டுமென்பதுடன், குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு வாரத்தின் எத்தினத்திலும் கூட்டப்படலாம்.

(2) கூட்டம் எந்தத் தினத்தில் நடைபெற வேண்டுமோ அத்தினமானது பெரும்பான்மை உறுப்பினர்களினால் உடன்பாடு காணப்பட்டவாறாக விசேட ஆலோசனைக் குழுவின் தலைவரினால் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

(3) கூட்டத்தைக் கூட்டுதல் பற்றிய அறிவித்தலொன்று, குழுவின் தலைரினால் கூட்டத் திகதிக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் கூட்டத்துக்கான எல்லா உறுப்பினர்களுக்கும் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் 'சேர்ப்பித்தல்' என்பது வதிவிட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் எனப் பொருள்படும்.

(4) அத்தினத்தில் இடம்பெறும் நிகழ்ச்சிநிரலானது கூட்டம் பற்றிய அறிவித்தலுடன் சேர்த்து சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், நிகழ்ச்சிநிரலில் குறித்துரைக்கப்பட்டவாறாக அத்தகைய திகதியின் கடமைகள் புரியப்படுதலும் வேண்டும்.

(5) எவரேனும் உறுப்பினர், கூட்டத்திற்கு முன்னர் இடப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் பெரும்பான்மை அபிப்பிராயத்துக்கு உடன்பட மறுக்கின்ற கருமங்களைக் கொண்டிருப்பின், அவை எழுத்துமூலம் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறிருப்பின், அத்தகைய திகதிக்குப் பொருத்தமான அத்தின அறிக்கையின் பாகமொன்றாக அது கவனத்திற் கொள்ளப்படுதலும் வேண்டும்.

(6) சபையினால் இக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்ட ஏதேனும் விடயம், அத்துடன் குழுவின் உறுப்பினரொருவரினால் அல்லது வேறு எவரேனும் உறுப்பினரினால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய இக்கட்டளையின் நோக்கம் தொடர்பாகவுள்ள ஏதேனும் கருத்து, கேள்வி என்பன எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்படலாம் என்பதுடன், எழுத்திலான அறிக்கையானது, கூட்டத்துக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(7) குழுவுக்கு முன் இடப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பிலான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளும் எல்லா உறுப்பினர்களும், வாக்குகளை அளிப்பதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(8) கூட்டத்துக்குச் சமுகமளித்த உறுப்பினர்கள் அவர்களது கையொப்பங்களையிட்டு அங்கீகாரம் வழங்கியதும், குழுவினது அறிக்கையின் சான்றுப்படுத்தப்பட்ட எல்லாப் பிரதிகளும் பரவலாக விநியோகிக்கப்படுதல் வேண்டும்.

11. இக்கட்டளையின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவின் ஏதேனும் கூட்டம் தொடர்பிலான நடவடிக்கைகளும் செயல் நடவடிக்கைகளும் குழுவின் செயலாளரினால் அறிக்கையிடப்படுதல் வேண்டும் என்பதுடன், இயைபான அறிக்கையானது, அத்தினத்தில் கூட்டத்துக்குச் சமுகமளித்த எல்லா உறுப்பினர்களும் அவர்களது கையொப்பங்களை இடுவதன்மூலம் அங்கீகரிக்கப் படுதலும் வேண்டும். அறிக்கையானது அங்ஙனம் அங்கீகரிக்கப்பட்டதும், குழுவின் செயலாளர் அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை குழுவின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் வழங்க வேண்டும்.

12. இக்கட்டளையின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவினால் கவனத்திற் கொள்ளப்பட்ட ஆவணங்களும் குழு அறிக்கைகளும் பாதுகாப்பாக வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

13. (1) இக்கட்டளையின்கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவின் நியமன உறுப்பினரொருவர், குழுவின் அனுமதியின்றி குழுவின் மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ச்சியாகச் சமுகமளித்திராதிருப்பின், விசேட ஆலோசனைக் குழுவிலான அவரது உறுப்பினர் உரிமை முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

(2) குழுவில் ஏற்படும் ஏதேனும் வெற்றிடத்துக்கு வேறோர் உறுப்பினர் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், உறுப்பினர்களை நியமிப்பதில் இக்கட்டளையின்கீழ் குறித்துரைக்கப்பட்ட அமைப்புமுறை ஏற்புடையதாதலும் வேண்டும்.

(3) குழுவில் ஏற்பட்ட வெற்றிடமொன்றுக்கு உறுப்பினரொருவரை நியமிக்கும் பட்சத்தில், நியமிக்கப்பட்ட அத்தகைய உறுப்பினரின் பதவிக்காலமானது அவர் எந்த உறுப்பினரை அடுத்து வருகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாது எஞ்சியுள்ள பதவிக்காலமாக இருத்தல் வேண்டும்.

14. (1) நகர சபையின் எவரேனும் உறுப்பினர் அல்லது அலுவலர், குழுவின் முன்னர் இடப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அவரது கருத்துக்களை முன்வைப்பது அப்போதைக்கு அவசியமானதென அபிப்பிராயப்படுகின்றபோதெல்லாம், அத்தகைய இயைபான கருத்துக்கள் குழுவுக்கு வாய்மொழிமூலமாக அல்லது எழுத்துமூலமாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) குழுவானது அதன்முன்னர் இடப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொள்வது பொருத்தமானதென தீர்மானிக்கப்படின், அக்குழு அத்தகைய விடயம் தொடர்பில் பொதுக் கூட்டத்துக்கான ,றுதி அறிவுறுத்தல்களைச் சமர்ப்பிக்க முன்னர் பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு செயல்படுதல் வேண்டும்.

15. இக்கட்டளையின்கீழான விசேட ஆலோசனைக் குழுவின்கீழ் கருத்திற்கொள்ளப்பட்ட நகர சபையின் அங்கீகாரத்துக்காக ஒவ்வொரு மாதமும் சமர்ப்பிக்கப்பட்ட விதப்புரைகள் தொடர்பான கருத்துக்கள், பொதுக் கூட்டத்தில் அல்லது நகர சபையினால் முடிவு செய்யப்பட வேண்டிய அடுத்துவரும் மாதத்திலான விசேட கூட்டமொன்றில் அத்தகைய குழுவின் தவிசாளரினால் முன்மொழியப்படுதல் வேண்டும்.

16. குழுவொன்றின் நடவடிக்கைகள் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் இருத்தல் வேண்டும் என்பதுடன், அறிக்கையானது தொடர்பாடல் மொழி மூலத்துக்கு இசைவாகத் தயாரிக்கப்படுதலும் வேண்டும். சிங்கள மொழிமூலத்தில் தயாரிக்கப்பட்ட குழு அறிக்கையின் தமிழ் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கும், தமிழ் மொழிமூலத்தில் தயாரிக்கப்பட்ட குழு அறிக்கையின் சிங்கள பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கும் உரித்துடையவராவார்.

17. இக்கட்டளையின் சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

EOG 03- 0364/2

---

**மத்திய மாகாண சபை**

துணைச் சட்டம்

**1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கத்தக்க 252 ஆம் அதிகாரமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 326 ஆம் பிரிவின் கீழ் பிறப்பிக்கப்படும் உத்தரவு**

மத்திய மாகாணத்தின் ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ. கமகே ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கத்தக்க, நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 அதிகாரமான) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 326 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள உத்தரவினை இங்கு பிரசுரிப்பதாக அறிவிக்கின்றேன்.

சட்டத்தரணி **லலித் யூ. கமகே,**
ஆளுநர்,
மத்திய மாகாணம்.

மாளிகை சதுக்கம்,
கண்டி,
2023, மாச்சு 16.

கட்டளை

1. 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் ,லக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 262 ஆவது ஏற்பாடுகளுக்கமைய, இவ்வுத்தரவானது, மாநகர சபையொன்றின் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்ட பெண்களின் பங்களிப்புடன், மாநகர சபையின் அதிகார வரம்பில் வாழும் பெண்களினது நல்வாழ்வுக்கும் நலன்புரிக்குமாக மாநகர

சபையின் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றும் போது பின்பற்ற வேண்டிய விடயங்கள் குறித்து பிரதேச சபைகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அவசியமானவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆலோசனைகளை வழங்கல் மற்றும் அதற்கான ஏற்பாடுகளை வழங்குவதற்கென இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

2. மாநகர சபைகளினால் ஒவ்வொரு நிதியாண்டுக்குமாக மாநகர சபையின் அதிகார பிரதேசத்தில் வாழும் பெண்களின் முன்னேற்றத்துக்காகவும் அவர்களின் நல்வாழ்வுக்கும் நலன்புரிக்குமாகவும் அத்தகைய மாநகர சபைகளினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டான மூலோபாயங்கள் பற்றிய ,க்கட்டளையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் மீது மாநகர சபைக்கு அறிவுறுத்தல்களை வழங்கும் பொருட்டு, மகளிர் விவகாரங்கள் தொடர்பான விசேட ஆலோசனைக் குழுவொன்றை நியமிப்பதற்கெனத் செயற்டுதல் வேண்டும்.

3. இந்த உத்தரவின் கீழ் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவொன்று பின்வரும் விடயங்கள் தொடர்பில் மாநகர சபைக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் வேண்டும்:

(1) பெண்கள் அதிகார பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் சமூக நலன்புரி நடவடிக்கைகளினல் ஈடுபடுத்தக்கூடிய வகையில் பெண்களின் முன்னேற்றத்துக்கான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்.

(2) பெண்களுக்கான அறிவையும், மனப்பாங்குகளையும் மற்றும் திறன்களையும் முன்னேற்றுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

(3) மாநகர சபையின் அதிகார பிரதேசத்திலுள்ள பெண்களைப் பாதுகாக்கும் பொருட்டும், துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் பொருட்டும், மாநகர சபை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களும் மூலோபாயங்களும் நடைமுறைப்படுத்தல்

(4) பெண்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களையும் கடன் திட்டங்களையும் அறிமுகப்படுத்தல்

(5) அதிகார பிரதேசத்தில் பசுமை விவசாயம் உள்ளடங்கலாக வீட்டுத் தோட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவிப்பதற்கு அவசியமான அறிவுறுத்தல்களையும் உதவியையும் வழங்குதல்

(6) அதிகார இடப்பரப்பில் வாழும் பெண்களின் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் நோக்கத்துக்காக, கலந்துரையாடல் குழாமொன்றை உருவாக்குவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்.

(7) பெண்களின் தனித் திறன்களையும் விருத்திச் செய்யவும் பாரம்பரிய கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் அவசியமான உதவிகளை வழங்குதல் மற்றும் அக்கைத்தொழில்களுக்குப் பொருத்தமான சந்தையை அறிமுகப்படுத்தல்.

4. இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவின் அமைப்புமுறையானது, அந்த மாநகர சபையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பெண் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்கினருக்குச் சமமான எண்ணிக்கையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், மாநகர சபையின் பெண் உறுப்பினர்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். ஆயின், மாநகர சபையின் நகரபிதா பெண்ணொருவராக இருக்கின்றவிடத்து, அவர் குழுவின் பதவிவழி உறுப்பினரொருவராக இருத்தல் வேண்டும்.

5. இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களிடையே ,ருந்து தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர், பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பின் மூலம், அக்குழுவின் தலைவராக நியமிக்கப்படுதல் வேண்டும். ஆயின், மாநகர சபையின் நகரபிதா பெண்ணொருவராக இருக்கின்றவிடத்து, அப்பெண் தலைவர் குழுவின் பெண் தலைவராக நியமிக்கப்பட வேண்டும்.

6. இக்கட்டளைச் சட்டத்தின் மூலம் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவானது, குழுவென்ற வகையில் உடன்பட்ட எல்லாக் உத்தரவுகளும், கூட்டத்துக்குச் சமுகமளித்து வாக்களித்த பெரும்பான்மை உறுப்பினர்களினால் உடன்பாடு காணப்பட்ட உத்தரவுகளாக இருத்தல் வேண்டும்.

7. இவ்வுத்தரவின் கீழான ஏதேனும் கூட்டத்தில் எவையேனும் விடயங்களுக்குச் சார்பாக அல்லது சார்பின்றி அளிக்கப்பட்ட வாக்குகள் சமமாகக் காணப்படும் பட்சத்தில், அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்கும் உறுப்பினர், அவரது சொந்த வாக்குக்கு மேலதிக வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

8. இக்கட்டளையின்கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான தினத்தில் அத்தகைய கூட்டத்திற்குச் சமுகமளித்துள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றிலொரு பங்கினருக்குச் சமமானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன், குழுக் கூட்டத்துக்காக குறித்துரைக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை உறுதியாக இருந்தாலே ஒழிய எத்தகைய நடவடிக்கையும் கூட்டத்தில் செயற்படுத்தக் கூடாது.

9. மாநகர சபையின் செயலாளரர் உத்தியோகபூர்வமாக, இவ்வுத்தரவின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவின் செயலாளராக இருத்தல் வேண்டும்.

10. விசேட ஆலோசனைக் குழுவினது கூட்டமொன்றின் விடயத்தில் -

(1) இக்கூட்டமானது, ஆகக்குறைந்தது ஒவ்வொரு மாதத்திலும் ஒரு தடவையேனும் நடைபெற வேண்டுமென்பதுடன், குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு வாரத்தின் எத்தினத்திலும் கூட்டப்படலாம்.

(2) கூட்டம் எந்தத் தினத்தில் நடைபெற வேண்டுமோ அத்தினமானது பெரும்பான்மை உறுப்பினர்களினால் உடன்பாடு காணப்பட்டவாறாக விசேட ஆலோசனைக் குழுவின் தலைவரினால் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

(3) கூட்டத்தைக் கூட்டுதல் பற்றிய அறிவித்தலொன்று, குழுவின் தலைரினால் கூட்டத் திகதிக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் கூட்டத்துக்கான எல்லா உறுப்பினர்களுக்கும் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் ‘சேர்ப்பித்தல்’ என்பது வதிவிட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் எனப் பொருள்படும்.

(4) அத்தினத்தில் இடம்பெறும் நிகழ்ச்சிநிரலானது கூட்டம் பற்றிய அறிவித்தலுடன் சேர்த்து சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், நிகழ்ச்சிநிரலில் குறித்துரைக்கப்பட்டவாறாக அத்தகைய திகதியின் கடமைகள் புரியப்படுதலும் வேண்டும்.

(5) எவரேனும் உறுப்பினர், கூட்டத்திற்கு முன்னர் இடப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் பெரும்பான்மை அபிப்பிராயத்துக்கு உடன்பட மறுக்கின்ற கருமங்களைக் கொண்டிருப்பின், அவை எழுத்துமூலம் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறிருப்பின், அத்தகைய திகதிக்குப் பொருத்தமான அத்தின அறிக்கையின் பாகமொன்றாக அது கவனத்திற் கொள்ளப்படுதலும் வேண்டும்.

(6) சபையினால் இக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்ட ஏதேனும் விடயம், அத்துடன் குழுவின் உறுப்பினரொருவரினால் அல்லது வேறு எவரேனும் உறுப்பினரினால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய இக்கட்டளையின் நோக்கம் தொடர்பாகவுள்ள ஏதேனும் கருத்து, கேள்வி என்பன எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்படலாம் என்பதுடன், எழுத்திலான அறிக்கையானது, கூட்டத்துக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(7) குழுவுக்கு முன் இடப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பிலான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளும் எல்லா உறுப்பினர்களும், வாக்குகளை அளிப்பதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(8) கூட்டத்துக்குச் சமுகமளித்த உறுப்பினர்கள் அவர்களது கையொப்பங்களையிட்டு அங்கீகாரம் வழங்கியதும், குழுவினது அறிக்கையின் சான்றுப்படுத்தப்பட்ட எல்லாப் பிரதிகளும் பரவலாக விநியோகிக்கப்படுதல் வேண்டும்.

11. இக்கட்டளையின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவின் ஏதேனும் கூட்டம் தொடர்பிலான நடவடிக்கைகளும் செயல்நடவடிக்கைகளும் குழுவின் செயலாளரினால் அறிக்கையிடப்படுதல் வேண்டும் என்பதுடன், இயைபான அறிக்கையானது, அத்தினத்தில் கூட்டத்துக்குச் சமுகமளித்த எல்லா உறுப்பினர்களும் அவர்களது கையொப்பங்களை இடுவதன் மூலம் அங்கீகரிக்கப்படுதலும் வேண்டும். அறிக்கையானது அங்ஙனம் அங்கீகரிக்கப்பட்டதும், குழுவின் செயலாளர் அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை குழுவின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் வழங்க வேண்டும்.

12. இக்கட்டளையின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவினால் கவனத்திற் கொள்ளப்பட்ட ஆவணங்களும் குழு அறிக்கைகளும் பாதுகாப்பாக வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

13. (1) இக்கட்டளையின்கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆலோசனைக் குழுவின் நியமன உறுப்பினரொருவர், குழுவின் அனுமதியின்றி குழுவின் மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ச்சியாகச் சமுகமளித்திராதிருப்பின், விசேட ஆலோசனைக் குழுவிலான அவரது உறுப்பினர் உரிமை முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

(2) குழுவில் ஏற்படும் ஏதேனும் வெற்றிடத்துக்கு வேறோர் உறுப்பினர் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், உறுப்பினர்களை நியமிப்பதில் ,க்கட்டளையின்கீழ் குறித்துரைக்கப்பட்ட அமைப்புமுறை ஏற்புடையதாதலும் வேண்டும்.

(3) குழுவில் ஏற்பட்ட வெற்றிடமொன்றுக்கு உறுப்பினரொருவரை நியமிக்கும் பட்சத்தில், நியமிக்கப்பட்ட அத்தகைய உறுப்பினரின் பதவிக்காலமானது அவர் எந்த உறுப்பினரை அடுத்து வருகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாது எஞ்சியுள்ள பதவிக்காலமாக இருத்தல் வேண்டும்.

14. (1) மாநகர சபையின் எவரேனும் உறுப்பினர் அல்லது அலுவலர், குழுவின் முன்னர் இடப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அவரது கருத்துக்களை முன்வைப்பது அப்போதைக்கு அவசியமானதென அபிப்பிராயப்படுகின்றபோதெல்லாம், அத்தகைய இயைபான கருத்துக்கள் குழுவுக்கு வாய்மொழிமூலமாக அல்லது எழுத்துமூலமாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) குழுவானது அதன் முன்னர் இடப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொள்வது பொருத்தமானதென தீர்மானிக்கப்படின், அக்குழு அத்தகைய விடயம் தொடர்பில் பொதுக் கூட்டத்துக்கான இறுதி அறிவுறுத்தல்களைச் சமர்ப்பிக்க முன்னர் பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு செயல்படுதல் வேண்டும்.

15. இக்கட்டளையின்கீழான விசேட ஆலோசனைக் குழுவின்கீழ் கருத்திற்கொள்ளப்பட்ட மாநகர சபையின் அங்கீகாரத்துக்காக ஒவ்வொரு மாதமும் சமர்ப்பிக்கப்பட்ட விதப்புரைகள் தொடர்பான கருத்துக்கள், பொதுக் கூட்டத்தில் அல்லது மாநகர சபையினால் முடிவு செய்யப்பட வேண்டிய அடுத்துவரும் மாதத்திலான விசேட கூட்டமொன்றில் அத்தகைய குழுவின் தவிசாளரினால் முன்மொழியப்படுதல் வேண்டும்.

16. குழுவொன்றின் நடவடிக்கைகள் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் ,ருத்தல் வேண்டும் என்பதுடன், அறிக்கையானது தொடர்பாடல் மொழி மூலத்துக்கு இசைவாகத் தயாரிக்கப்படுதலும் வேண்டும். சிங்கள மொழிமூலத்தில் தயாரிக்கப்பட்ட குழு அறிக்கையின் தமிழ் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கும், தமிழ் மொழிமூலத்தில் தயாரிக்கப்பட்ட குழு அறிக்கையின் சிங்கள பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கும் உரித்துடையவராவார்.

17. இக்கட்டளையின் சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

EOG 03- 0364/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.